புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com





ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • பிப்ரவரி 20 2025 • புரட்சி 25 • முழக்கம் 06 • விலை ரூ.3.00


## ஒன்றிய ஆட்சிக்கு எதிராக கழகம் ஆர்ப்பாட்டம்

# கல்வி உரிமையைப் பறிக்காதே

ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வி மற்றும் பல்கலைக்கழக கல்வி உரிமைகளைப் பறிப்பதை எதிர்த்து தமிழ்நாடு போர்க்கோலம் பூண்டுள்ளது. திமுக சார்பில் டெல்லியில் கண்டனஆர்ப்பாட்டம் நடந்து முடிந்துள்ளது. திராவிடர் விடுதலைக் கழகம் தமிழ்நாடடின் முக்கிய நகரங்களில் பிப்.13 அன்று கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. பல்கலைகழகக் மானியக்குழுவுக்கு உருவாக்கப்பட்டுள்ள புதிய விதிகளை எதிர்த்து இந்த ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது. இந்த புதிய விதிகளில் பல்கலைக்கழகங்களை ஒன்றிய அரசின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் ஆபத்து அடங்கியுள்ளது. ஆர்ப்பாட்டத்தின் நோக்கங்களை விளக்கி துண்டறிக்கை அச்சிடப்பட்டு மக்களிடம் வழங்கப்பட்டன. கழக ஆர்பாட்டங்களின் தொகுப்பு...



**சேலம்:** மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஒருங்கிணைப்பில் யூஜிசி விதிகளில் திருத்தம் செய்து மாநிலங்களின் கல்வி உரிமையைப் பறிக்கிற, இட ஒதுக்கீட்டு உரிமையை பறிக்கிற ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து 13.02.2025 அன்று காலை 10.00 மணியளவில் சேலம் கோட்டை மைதானத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் தலைமை வகித்தார்.

சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் க.சக்திவேல், மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு, தலைமைக் குழு உறுப்பினர்கள் காவை ஈசுவரன், அ.சக்திவேல், சேலம் மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள், சேலம் மாவட்ட அமைப்பாளர் முத்துமாணிக்கம், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, சேலம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா, சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வடக்கு மாவட்டச் செயலாளர் காஜாமைதீன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர் அணி பொறுப்பாளர் தினேஷ், திராவிட முன்னேற்றக் கழக சேலம் மாவட்ட இலக்கிய அணித் தலைவர் கோனூர் வைரமணி, த.மு.மு.க மாநில செயற்குழு உறுப்பினர் சையத் சலாவுதீன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட அமைப்புச் செயலாளர் சுல்தான், ம.தி.மு.க மாநகரச் செயலாளர் அருள்மாது, தமிழ் புலிகள் கட்சி மத்திய மாவட்டச் செயலாளர் ராவணபிரபு, த.பெ.தி.க மாவட்டச் செயலாளர் தங்கராஜ், திராவிட இயக்கத் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் சுந்தரவதனம், மக்கள் உரிமை பாதுகாப்பு இயக்கம் மாயன், தமிழ்தேச மக்கள் முன்னணி மாரியப்பன், புரட்சிகர இளைஞர் முன்னணி வின்சென்ட், சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, சேலம் மாநகரத் தலைவர் பாலு, ஆத்தூர் நகரத் தலைவர் மகேந்திரன், சேலம் மாவட்ட இளைஞர் அணித் தலைவர் தேவபிரகாஷ் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி யூஜிசி வரைவு அறிக்கையின் புதிய நெறிமுறைகள் குறித்து விளக்க உரை நிகழ்த்தினார்கள். இறுதியாக சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ் நன்றி கூற ஆர்ப்பாட்டம் நிறைவு பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழக தோழர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் தோழமை இயக்க தோழர்கள் 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**சென்னை:** இடஒதுக்கீட்டு உரிமையைப் பறிப்பதோடு மட்டுமல்லாமல், பல்கலைக்கழகங்களில் ஆளுநரின் எதேச்சதிகாரத்தையும் திணிக்க முயலும் யூஜிசி-யைக் கண்டித்து 13.02.2025 அன்று மாலை 5 மணிக்கு வள்ளுவர் கோட்டத்தில் சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், திமுக மாணவரணி மாநிலச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், பெரியார் சிந்தனையாளர் இயக்க ஒருங்கிணைப்பாளர் புதுவை தீனா, தமிழர் விடியல் கட்சி ஒருங்கிணைப்பாளர் இளமாறன், புமாஇமு மாநில செயற்குழு உறுப்பினர் மணியரசன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். பெரியார் விழுது சந்தோஷ் கொள்கைப் பாடலை பாடினார். அன்பு தனசேகர், வேழவேந்தன், சேத்துப்பட்டு இராசேந்திரன், ம.கி.எட்வின் பிரபாகரன், இராயப்பேட்டை ப.அருண், பேரன்பு உள்ளிட்ட பல கழகத் தோழர்களும் பல்வேறு தோழமை இயக்கத்தினரும், மாணவர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

**ஈரோடு:** ஒன்றிய அரசு யூஜிசி விதிகளில் செய்த சட்டத் திருத்தத்தைக் கண்டித்து, திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோடு மாவட்டத்தின் சார்பாக ஈரோடு சூரம்பட்டி நால்ரோடு பகுதியில் (13.2.2025) காலை 11-மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, கழகத்தின் மாநில அமைப்புச் செயலாளர் ப.இரத்தினசாமி தலைமை தாங்கினார். ஒன்றிய அரசுக்கு எதிரான முழக்கங்கள் எழுப்பப்பட்டன. கொங்கு விடுதலைப்புலிகள் அமைப்பின் நிறுவனர் விஸ்வநாதன், ஆதித்தமிழர் பேரவை தொழிலாளர் அணியின் மாநிலச் செயலாளர் வி.கனியமுதன், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் ஈரோடு மாவட்டப் புறநகர் செயலாளர் சரவணப் பெருமாள் ஆகியோர் தங்களது கண்டன உரையைப் பதிவு செய்தனர். ஈரோடு தெற்கு-வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகளும் தோழர்களும், தோழமை அமைப்பைச் சார்ந்த தோழர்களும் என கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருவாரியாகப் பங்கேற்றனர்.

**திருப்பூர்:** ஒன்றிய பாஜக அரசு யூஜிசி விதிகளில் திருத்தம் செய்து கல்வி உரிமையைப் பறிக்காதே!இட ஒதுக்கீட்டு உரிமையை பறிக்காதே! எனும் முழக்கங்களுடன் திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் 13.02.25 வியாழன் மாலை 05.00 மணி அளவில் திருப்பூர் மாநகராட்சி முன்பு நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் முகில் ராசு தலைமை தாங்கினார்.மாநகர துணைத் தலைவர் மாரிமுத்து வரவேற்பு உரையாற்றினார். மாநகரச் செயலாளர் மாதவன், மாநகர அமைப்பாளர்கள் சரஸ்வதி, முத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். சு.துரைசாமி மாநிலப் பொருளாளர் திவிக, எஸ்.இரவிச்சந்திரன் மாவட்டச் செயலாளர் இந்திய பொதுவுடமை கட்சி, விடுதலை செல்வன் துணைப் பொதுச் செயலாளர், ஆதித்தமிழர் பேரவை துரை வளவன், துணைப் பொதுச் செயலாளர், விசிக, க.வே.கதிரவன், மாநகரத் தலைவர், புரட்சிகர இளைஞர் முன்னணி, பாரதி சுப்பராயன் தலைவர் (நவீன மனிதர்கள் குழு), துரை.பரிமளராசன் இணையதள பொறுப்பாளர், சங்கீதா (மாவட்ட அமைப்பாளர் திவிக), சி.இரா. கனல்மதி, மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு மாணவர் கழகம், அய்யப்பன், வடக்கு ஒன்றிய அமைப்பாளர் நன்றி கூறினார். மா.ராமசாமி,தெற்கு பகுதி செயலாளர், கோவிந்தராஜ், நகர அமைப்பாளர் பல்லடம் திவிக, கணக்கன் ஒன்றியத் தலைவர் மடத்துக்குளம், சு.சிவானந்தம் ஒன்றியச் செயலாளர், மடத்துக்குளம், தாரை செல்வராஜ், அமைப்பாளர் தாராபுரம். இரவி, முத்துலட்சுமி, கனபதி, இராஜ்குமார், சங்கவி, சிரிஜா, பெரியார் பிஞ்சு தழல் சிறகன், இயல், ஆழியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**பொள்ளாச்சி:** திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக யூஜிசி விதிகளில் திருத்தம் ஒன்றிய அரசே கல்வி உரிமையைப் பறிக்காதே!இட ஒதுக்கீட்டு உரிமையைப் பறிக்காதே! கண்டன ஆர்ப்பாட்டத்தில்


தொடர்ச்சி 4-ஆம் பக்கம்


### அறிவிப்பு

**பெரியார் ஏன் திராவிடம் பேசினார்?**

**வாங்க வரலாறு பேசுவோம் பரப்புரை பயணம்..**

இப்போதைய பேசுபொருளாய் எதிர்மறையாய் உருவாக்கப்பட்டிருக்கிற அரசியல் சூழலை ,நேர்மறையாய் எடுத்துச் செல்லும் நோக்கத்தோடு உருவானது இந்த பரப்புரைப் பயணம். திராவிடர் விடுதலைக் கழகத்தால் தமிழ்நாட்டின் ஐந்து முனைகளில் இருந்து 16-3- 2025 அன்று புறப்பட உள்ள இந்த பரப்புரை பயணம் 22-3-2025 அன்று மயிலாடுதுறையில் சங்கமித்து நிறைவு விழாவாக நிறைவடைய உள்ளது.

பயணத்தில் பறை இசை, கொள்கைப் பாடல்கள், கலைநிகழ்ச்சிகள், விளக்க உரைகள் இடம்பெறும். பயண வழித்தடத்தில் துண்டறிக்கை வழங்கல் இயக்க நூல்கள் விற்பனையும் உண்டு. பயண வழித்தடத்தில் உள்ள கழக அமைப்புகள் பரப்புரை இடம், உணவு, தங்கும் இடம் போன்றவற்றை ஏற்பாடு செய்தும் ஒவ்வொரு நாள் முடிவிலும் பொதுக் கூட்டங்கள் நடத்தியும். பயணம் சிறக்க உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். விரிவான தகவல்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

## தலையங்கம்

# நீதிமன்றத்தின் ஜாதி எதிர்ப்பு குரல்.

ஜாதி சமூகத்தை பிளவுப்படுத்துகிறது! வளர்ச்சியை தடுக்கிறது. "ஜாதி இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதே அரசியல் சட்டத்தை வடிவமைத்த தலைவர்களின் கனவு. 75 ஆண்டுகளுக்குப் பிறகும் ஜாதி என்ற தேவை இல்லாத சுமையை சமுதாயத்தில் உள்ள சில பிரிவினர் இன்னும் கீழே இறக்கி வைக்கவில்லை." -இந்த வரலாற்று தீர்ப்பை உயர்நீதிமன்ற நீதிபதி டி.பரதசக்கரவர்த்தி வழங்கி உள்ளார்.

தீர்ப்பின் ஒவ்வொரு வரியும் "கல்வெட்டுப்" பதிவுகளாகும்.பொள்ளாச்சி வட்டம் ஆவல்பட்டிக் கிராமத்தில் உள்ள இரண்டு பெருமாள் கோவில்களில் அறங்காவலர்களாக ஒரு குறிப்பிட்ட ஜாதியின் உட்ஜாதிப் பிரிவினரையே நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தொடரப்பட்ட வழக்கு மனுவை தள்ளுபடி செய்த நீதிபதி, ஜாதி எதிர்ப்புக் கருத்துக்களை தீர்ப்பாகவே பதிவு செய்து இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை கோயில்கள் குறிப்பிட்ட ஜாதிகளின் கட்டுப்பாட்டில் தான் இயங்க வேண்டும் என்றும் அப்போதுதான் அவை காப்பாற்றப்படும் என்றும் பேசி இருக்கிறார். சமூக ஊடகங்களில் அவர் பேச்சு வலம் வருகிறது. பாஜக பேசும் இந்துத்துவ அரசியல் ஜாதி கட்டமைப்பை ஆதரிக்கிறது என்பதற்கு இதுவே சான்று. சமூக நீதியின் இலக்கு ஜாதித் தடைகளைத் தகர்த்து அதன் அடையாளத்தை அழித்து ஒழிப்பதே தவிர ஜாதிக்கு உயிர் ஊட்டுவது அல்ல. அதே பார்வையில் தான் நீதிபதி இந்த தீர்ப்பில் "ஜாதியை மேலும் நீட்டித்து நிரந்தரமாக்கும் எந்த கோரிக்கையும் அரசியல் சட்டத்தின் நோக்கத்துக்கு எதிரானது" என்று மிகச்சரியாக சுட்டிக்காட்டிக் இருக்கிறார்.

ஜாதிச் சங்க மாநாடுகளில் உரையாற்றிய பெரியார், அவர்களின் உரிமைக் கோரிக்கைகளை அழுத்தமாக ஆதரித்தார். அதே மாநாடுகளில் ஜாதியை பெருமைக்குரிய அடையாளம் ஆக்காதீர்கள் என்று அழுத்தமாக கண்டித்தார். ஆனால் இப்போது என்ன நடக்கிறது?

ஜாதி எதிர்ப்பையும் சமூக நீதியையும் கொள்கைகளாக அறிவித்துக் கொண்ட கட்சிகள் திரைமறைவில், தங்களுக்கான வாக்கு வங்கி அரசியலுக்காக சொந்த ஜாதி கட்டமைப்பை உறுதிப்படுத்தவே துடிக்கிறார்கள். சொந்த ஜாதிகளுக்கு உள்ளேயே திருமண உறவுகள் இருக்க வேண்டும் என்று "வரன்" தேடும் வணிக விளம்பரங்களில் வந்து பேசுகிறார்கள்.

ஒவ்வொரு ஜாதிக்கும்"வரன்" மணமகன்,மணமகளை தேர்வுச் செய்யும் வணிக நிறுவன விளம்பரங்கள் தொலைக்காட்சியில் வந்து கொண்டு இருக்கின்றன. உயர்நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பின் படி இந்த விளம்பரங்கள் அரசியல் சட்டத்தின் நோக்கத்துக்கு எதிரானதாகும். தமிழன் என்ற பெயரில் நாடகமாடும் சில அமைப்புகள் ஜாதிக்கு"குலம்"என்று பெயர்ச் சூட்டி கொண்டாடுகின்றனர். "நீ எந்த ஜாதி என்று சொல்: நீ தமிழனா என்பதற்கு நான் சான்று தருகிறேன்" என்று ஜாதிய தேசியங்களும் இங்கே இருக்கின்றன.

தமிழ் என்ற ஒற்றை அடையாளம் ஜாதியை மறுக்காமல் தனக்குள் எளிதாகவே இழுத்துக் கொள்கிறது. பேசுவது தமிழாக இருந்தாலும் மொழி அவர்களை ஒற்றுமைப்படுத்தாமல், ஜாதியால் கூறுபோடுகிறது. என்பதற்காகவே பெரியார் அந்த அடையாளச் சொல்லை ஏற்க மறுத்து, திராவிடர் என்ற அடையாளத்துக்குள் வந்தார். தமிழர்ப் பண்பாட்டின் அடையாளம் சமூக சமத்துவம் என்ற பெரியார் அதற்கான மாற்று வாழ்வியலையும் உருவாக்க முயன்றார். ஜாதிய ஒடுக்குமுறை ஆணாதிக்க ஒடுக்குமுறை என்ற இரண்டு தளங்களிலும் புது வெளிச்சம் பாய்ச்சிய தலைவர் பெரியார் ஒரே இயக்கம் சுயமரியாதை இயக்கம். அந்த வழியில் தான் "விவாக சுபமுகூர்த்தங்கள்"- "வாழ்க்கை துணைநல விழாக்களாக" மாறின, "கிரகப்பிரவேசம்"- "புதுமனை" விழாவாக மாறியது, "திதி கொடுத்தல்"- "நினைவு நாளாக" மாறியது.

"காதுக்குத்துதல்" நீக்கப்பட்டு "குழந்தைகள் பிறந்தநாள்" கொண்டாட்டங்கள் ஆகின. கோயில் திருமணங்கள் குறைந்து மண்டபத் திருமணங்கள் வரத் தொடங்கின. "பண்டிகைகளுக்கு மட்டுமே வாழ்த்து" கூறிய சமூகம் இது. இப்போது முகநூல்களில் பிறந்தநாள், திருமணம் நாள், வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன. "விநாயகன், கிருஷ்ணன், இராமன் பிறந்தநாளை மட்டுமே" கொண்டாடிய சமூகத்தில் "மனிதர்கள் பிறந்தநாளையும் கொண்டாட செய்யும் கலாச்சாரம்" மாற்றம் நிகழ்ந்தது வருகிறது.

பெரியார் பேசிய பெண்ணுரிமை கருத்துக்களால் ஒவ்வொரு பெற்றோரும் தனது மகனை விட மகளை நேசிக்க தொடங்கி விட்டனர். தங்களது மகள்களின் அறிவையும், ஆற்றலையும் கொண்டாடுகிறார்கள்.

ஆண் கல்வியை விடபெண் கல்விக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று முதலில் உரக்கச் சொன்னவர் பெரியார். அவரது கருத்துக்கு கிடைத்த வெற்றி இது. ஜாதியற்ற தமிழ் பண்பாட்டின் அடையாளத்திற்குப் பெரியார் இயக்கம் வழங்கிய கொடைகள் இவை. இப்போது நீதிமன்றங்களில் இருந்தும் ஜாதி எதிர்ப்புப் குரல் கேட்கத் துவங்கி இருப்பது, பெரியாரியலுக்குக் கிடைத்த மகத்தான வெற்றி.

# முதலில் இந்தி வரும்! பிறகு சமஸ்கிருதம் வரும்!

உத்தரப் பிரதேசத்தில் இந்திக்கு அடுத்து உருது பேசும் மக்கள் அதிகம் இருக்கிறார்கள். ஆனால் பாடத்திட்டங்கள், அரசுத்துறைகளில் இருந்து உருது வார்த்தைகளை தேடித்தேடி நீக்குகிறது அம்மாநில பாஜக அரசு. இதே தூய்மைவாதத்தை போஜ்புரியில் எதிர்பார்த்தால் அது தேசத்துரோகம் ஆகிவிடும்! பள்ளிகளில் உருதுவில் இறை வணக்கம் செய்ய அனுமதி மறுக்கிறார்கள். உருது ஆசிரியர்கள் பணி நியமனங்களை அலசி ஆராய்ந்து,அவர்களின் கோப்புகளில் எங்கேனும் சிறு பிழை இருக்காதா என தேடித்தேடி பணி நீக்கம் செய்கின்றனர்.

குஜராத்தில் அம்மாநில மொழியான குஜராத்திக்கே பரிதாப இடம்தான் மிஞ்சியிருக்கிறது. அதனால்தான் 2023-24 நிதியாண்டில் 1-8ஆம் வகுப்பு வரை குஜராத்தியை கட்டாயமாக்கும் தீர்மானம் அம்மாநில சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்டது. மூன்றாவது மொழியாக தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மற்ற மொழிகளை கற்பிக்கலாம் என பெயரளவில் சொல்லியிருக்கிறார்களே தவிர, ஒரு மாநிலத்தில் கூட விருப்பப்பாடமாக தென்மாநில மொழியை மாணவர்கள் தேர்ந்தெடுத்ததாகவோ அல்லது ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகவோ தகவல் இல்லை. ஏன், பல வட இந்திய மாநிலங்களில் ஆங்கில ஆசிரியர்கள் நியமனமே அரை குறையாகத்தான் உள்ளது.

மாறாக, இந்தியைத் திணித்த வட இந்திய மாநிலங்களில் மாநில அல்லது உள்ளூர் மொழிகளின் நிலையை கவலைக்கிடமாக்கியதுதான் நடந்திருக்கிறது. இப்போது இந்தி மட்டுமே அங்கும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்ட பிறகு, அடுத்து சங் பரிவார்களின் இலக்கான சமஸ்கிருதத்தை நோக்கி வேகமாக நகரத் தொடங்கிவிட்டார்கள். ராஜஸ்தானில் உருதுவை நீக்கிவிட்டு மூன்றாவது மொழியாக சமஸ்கிருதத்தை திணிக்க அம்மாநில பள்ளிக்கல்வித்துறை சமீபத்தில் முன்மொழிவு வழங்கியிருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் ஏற்கெனவே பல தொடக்கப் பள்ளிகளில் சமஸ்கிருதம் கட்டாயப்பாடமாக்கப்பட்டு விட்டது. உத்தராகண்டில் இரண்டாவது அலுவல் மொழியே சமஸ்கிருதம்தான்.

இந்தியா முழுவதும் சமஸ்கிருதம் படிக்கத் தெரிந்தவர்கள் 24,821 பேர்தான் என்கிறது புள்ளிவிவரம். ஆனால் மத்தியப் பிரதேசத்தில் நெடுஞ்சாலை வழிகாட்டிப் பலகைகள் சமஸ்கிருதத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.இமாச்சல்,கர்நாடகா,குஜராத்,பீகார் மாநிலங்களில் பள்ளி-கல்லூரிகளில் சமஸ்கிருத விழாக்கள்,கலாச்சார நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. மகாராஷ்டிராவில் சமஸ்கிருத வெளியீடுகள், கருத்தரங்குகள், மாநாடுகள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன. டெல்லியில் சமஸ்கிருதம் கற்றுக்கொள்ள உதவித்தொகை தரப்படுகிறது. இப்படி இந்தியில் ஊறிப்போன மாநிலங்கள் எல்லாம் அடுத்து, சமஸ்கிருதத்தை ஊறுகாய் போல தொடத் தொடங்கிவிட்டன. இன்னும் நாற்பது, ஐம்பது ஆண்டுகளில் அங்கே இந்திக்கு அடுத்த மொழியாக சமஸ்கிருதம் இருக்க வேண்டுமென்பது அவர்களின் இலக்கு. அதேவேளையில், இன்னும் இந்தியைத் திணிக்க முடியாத சில தென்மாநிலங்களுக்காகத்தான் மும்மொழி, மும்மொழி என்று முக்கிக் கொண்டிருக்கிறார்கள். இங்கும் திணித்துவிட்டால் அடுத்து சமஸ்கிருதத்தை எட்டிப்பார்க்க வைப்பார்கள். அதன்பிறகு 'ஒரே நாடு ஒரே மொழி' என்ற முழக்கத்தை கையிலெடுத்துவிடுவார்கள். அதற்கு இன்னும் ஒரு நூற்றாண்டு ஆகலாம்! ஆனால் அதைநோக்கியதுதான் அவர்களின் நகர்வு!

-பிரகாசு

## காரைக்குடியில் கருத்தரங்கம்




இந்தி இந்துத்துவம் இந்தியா பற்றிய பெரியாரின் சிந்தனைகள் என்ற தலைப்பில் 8.2.25 அன்று கருத்தரங்கம் காரைக்குடியில் நடைபெற்றது. இதில் கழக தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் இந்துத்துவம் இந்தி இந்தியா பற்றிய பெரியாரின் சிந்தனைகளையும் நாம் இதில் எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பதனையும் விரிவாக பேசினார்.

கருத்தரங்கத்தில் மக்கள் அதிகாரத்தின் மாநில பொருளாளர் தோழர் காளியப்பன், பேராசிரியர் சண்முகப்பிரியா உள்ளிட்ட பலர் கருத்துரையாற்றினர். நிகழ்வு ஏற்பாட்டை மார்க்சு பெரியார் அம்பேத்கர் கூட்டமைப்பு செய்தது. தமிழ்நாடு சிறுபான்மை நலக்குழு மாவட்ட பொறுப்பாளர் வேணுகோபால் முன்னிலை வகித்தார் திராவிடர் விடுதலை கழகத்தின் சிவகங்கை மாவட்ட தலைவர் பெரியார் முத்து தலைமையில் வைத்தார், இனங்களின் இறையாண்மைக்கான இளைஞர் மாணவர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் பாவெல் மற்றும் திவிக இளங்கோவன் நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார்கள்.

இந்நிகழ்வில் திவிக மாவட்ட தலைவர் முத்துக்குமார், ரமேஷ், இளங்கோ, திருநாவுக்கரசு, அன்புக்கரசு, தவச்செல்வன் மற்றும் பல்வேறு இயக்கங்களை சார்ந்த பேராசிரியர் கோச்சடை, பெரியார் கடைசி உதவியாளர் தோழர் எழில் மாறன், வேம்பன், பூர்ணிமா உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்று கருத்துரையாற்றி சிறப்பித்தனர்.

# தமிழ்தேசிய முப்பாட்டன் பெருமையும் சிங்களஇனவெறியும் ஒன்றுதான்!

***கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் b&w tamil youtube சேனலுக்கு அளித்த நேர்காணலில், மேதகு பிரபாகரன் பெரியார் கொள்கைகளையே ஈழத்தில் செயல்படுத்தினார் என்பதை விரிவாக விளக்கினார் . கடந்த வார தொடர்ச்சி...***

***நெறியாளர்:*** *ஈழத்தில் பிரபாகரன் நடத்திய விடுதலைப் போராட்டத்துக்கும் இங்கே தமிழ்தேசிய போரட்டத்துக்கும் வேறுபாடு இருக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா?*

***பொதுச்செயலாளர்:*** *அடிப்படையில் ஒரு தேசத்தின் விடுதலை என்பது மக்களின் சமத்துவத்தையும், உரிமையும் அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும். இதற்கு நேர்மாறாக மக்களிடையே பிளவுகளையும், பாகுபாடுகளையும் அடையாளப்படுத்தும் கொள்கைகளைக் கொண்ட தேசியம் என்பது விடுதலைக்கு நேர் முறணானது. பிரபாகரன் போராடிய ஈழ விடுதலை என்பது ஐக்கிய நாட்டு சபை அங்கீகரித்த தேசிய சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி நடத்திய போராட்டமாகும்.*

*இந்தியாவை இந்து நாடாக மாற்றி அமைப்பதற்கு இப்போது இங்கே முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கினறன. இந்தியா என்ற சொல்லுக்கு முசுலிம்களும், கிருத்தவர்களும் உள்ளடக்கிய நாடு என்று பொருள்படுகிறது, எனவே இந்தியா என்ற சொல்லை ஏற்க மாட்டோம் என்று இந்து தேசம் என்பதை அடையாளப்படுத்தும் பாரத தேசம் என்ற சொல்லை மட்டும் ஏற்போம் என்று, இங்கே பாஜக, சங்பரிவாரங்களும் கூறுகிறார்கள்.*

*தமிழ்த் தேசியம் பேசுகிற சில குழுக்கள் தெலுங்கு, கன்னடம், பேசும் மக்கள் தமிழ்நாட்டில் பல தலைமுறைகளாக வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவர்களை தமிழர்களாக ஏற்க மாட்டோம் என்று தமிழ்தேசியத்தில் பாகுபாடுகளை திணிக்கிறார்கள். இந்த அடையாளத்தை இரண்டு தேசியங்களுக்கும் அறிவியல் வரலாற்றுப் பார்வை இல்லை. சிங்களர்களிடம் இதே பார்வை தான் இருந்தது என்று கூறுகிறார் பிரபாகரன்.*

***2005-ம் ஆண்டு பிரபாகரன் நிகழ்த்திய மாவீரர்*** *நாள் உரையில் இதை தெளிவுப்படுத்துகிறார்."*

***"சிங்களத் தேசம் இன்னும் மகாவம்சம் மனவுலவில், அந்தப் புராண கருத்துலகில் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைக்கதையில் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்.***

***அசைவற்றதாக இறுகிப்போன இந்தப் புராணக் கருத்து நிலையிலிருந்து சிங்களத் தேசம் விடுபடப் போவதில்லை.இந்த கருத்தியல் குருட்டுத் தனத்தால் இலங்கைத் தீவின் உண்மை வரலாற்றையும் அங்கு நிலவும் சமுதாயம் மொய்ந் நிலைகளையும் சிங்கள மக்களாலும் அவர்களது அரசியல், மதத் தலைமைகளும் தெளிவாக புரிந்து கொள்ள முடியவில்லை***

***இலங்கை தீவில் வடகிழக்கு மாநிலத்தை*** *தாயகத் தேசமாகக்* ***கொண்டு தமிழீழ மக்கள் என்ற வரலாற்றுத் தொன்மைமிக்க ஓர் இனம் இருப்பதையும் அவர்கள் ஒரு தனித்துவ தேசமாக வாழ்ந்து வருவதையும் இவர்களுக்கு அடிப்படையான அரசியல் உரிமைகள், சுதந்திரங்கள் உள்ளன என்பதையும் சிங்களவர்கள் புரிந்துகொள்ளவே ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை"***

*-பிரபாகரன் பேசிய ஈழவிடுதலை புராண,மத கற்பிதங்களுக்கு அப்பாற்பட்ட வரலாற்றுப் பார்வை கொண்டது என்பதை பிரபாகரன் மிகத்தெளிவாக விளக்கி இருக்கிறார்.*

*பிரபாகரன் பேசிய ஈழவிடுதலை என்பது இங்கே பேசும் மதவாத தேசியம் மற்றும் பாசிச தமிழ்தேசியங்களுக்கு நேர் எதிரானது மாறாக வரலாற்று பார்வை கொண்டது என்பதை பிரபாகரன் தெளிவுப்படுத்துகிறார். உண்மையான பௌத்தம் சிங்கள இனவெறிக்கு எதிரானது என்றும் பிரபாகரன் கூறுகிறார்.*

***"ஜெயவர்த்தன (முன்னால் இலங்கை அதிபர்) உண்மையான பௌத்தராக இருந்து இருப்பார் என்றால் நான் ஆயுதம் எந்த வேண்டிய அவசியம் இருக்காது"*** *என்று சண்டே இந்திய ஆங்கில ஏட்டுக்கு (17-3-1984) அளித்த பேட்டியில் கூறுயுள்ளார். சிங்கள அரசுதான் எங்களுக்கு எதிரியே தவிர சிங்கள மக்கள் அல்ல என்றும் பிரபாகரன் மேலும் தெளிவுபடுத்துகிறார்.*

*"*___சிங்கள மக்களின் ஆதரவை பெறவே விரும்புகிறோம். எங்களது நோக்கம் நியாயமானதும் சட்ட வழிப்பட்டதாகும். ஆனால் இனவெறி பிடித்த அரசியல்வாதிகளாலும், மதவெறி பிடித்த புத்த குருமார்களாலும் தமிழர்களுக்கு எதிராக நஞ்சூட்டப்பட்ட சிங்கள மக்களை எங்களுக்கு ஆதரவாக திரட்ட முடியவில்லை என்று ஒரு பேட்டியில் கூறுகிறார் (தி வீக் ,(23/03/1986)"___ *-மதவெறியும் இனவெறியும் மக்கள் விடுதலைக்கு எதிரானது என்ற பிரபாகரனின் தெளிவான பார்வை இதில் பளிச்சிடுகிறது.*

***நெறியாளர்:*** *பிரபாகரன் கேட்ட தமிழீழ விடுதலை என்பது சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டது என்று கூறுகிறீர்கள், இங்கே சில குழுக்கள் முன்வைக்கும் தமிழ்த்தேசியத்தை எந்த வகையில்வேறுப்படுத்துகிறீர்கள்?*

***பொதுச்செயலாளர்:*** *இங்கே தமிழ்த்தேசிய பேசுகிறவர்கள் உண்மையான எதிரி யார் என்பதை வரையறுப்பது இல்லை. எதிரிகளை திசைச் திருப்பி மடை மாற்றுகிறார்கள். இந்தியாவின் தேசிய இனங்களின் உரிமைகளை மறுத்து வைத்திருப்பதே இந்தியம் தான். இந்தியா என்பது பார்ப்பன பனியாக்களின் அதிகார மையம். தமிழர்களின் அரசியல் உரிமைகளைப் பறித்து வைத்திருப்பது இந்தியா ஒன்றியம். சமஸ்கிருத பண்பாட்டை பார்ப்பனியம் தமிழர்களிடம் திணித்து அவர்களின் மொழி, இன அடையாளங்களை அடிமைப்படுத்துகிறது.*

*தமிழர்பெயரில், இல்லத் திருமணங்களிலோ, கோயில்களிலோ, வழிபாட்டு சடங்குகளிலோ, கொண்டாடும் பண்டிகைகளிலோ, சூட்டும் பெயர்களிலோ, தமிழர் அடையாளம் மறுக்கப்பட்டு பார்ப்பனிய சமஸ்கிருதமே ஆட்டிப்படைக்கிறது. இந்த பார்ப்பனிய பண்பாட்டை சமரசம் செய்து கொண்டு திராவிட எதிர்ப்பை முன்னிறுத்தும் தமிழ்த்தேசியம் உண்மையான மக்களின் விடுதலைக்கானது அல்ல. இந்த உண்மையானது தமிழர் விடுதலையை தான் அண்ணா கேட்ட திராவிட நாடும், பெரியார் கேட்ட தமிழ்நாடும் இந்த உண்மையான விடுதலைக்கு தான்.பாசிஸ்டு தமிழ்தேசியங்கள் தங்களுக்கு தாங்களே சுய பெருமை பேசி மார்தட்டிக் கொள்வதை பிரபாகரன் வெறுக்கிறார். அவர் இவ்வாறு ஒரு பேட்டியில் கூறுகிறார்,*

***"தமிழ்ப் பகுதிகளில் நீங்கள் ஒரு கிராமப்புற வீரனாகக் கருதப்படுகிறீர்கள். உங்கள் வாழ்நாளிலேயே ஒரு வரலாறாக உருவெடுப்பதற்கான காரணங்கள் என்ன என நினைக்கிறீர்கள்?***

***பிரபாகரன் :அதை மக்கள்தான் கூறவேண்டும். அடிப்படையில் அது போன்ற உணர்ச்சிகரமான பேச்சுக்களை நான் வெறுக்கிறேன். அது ஒருவரது தற்பெருமையை வளர்த்துவிடும். ஒரு விடுதலைப் போராளி அது போன்ற சுயபெருமைகளிலிருந்தும் தன்னலப் போக்கிலிருந்தும் விடுபட்டு உயரிய போராட்டத்தில் முழு மனதோடு ஆழ்ந்துவிட வேண்டும். நாங்கள் தமிழ் மக்களின் அடையாளங்கள் மட்டுமே. 5-10-1985 சண்டே இந்தியா ஆங்கில வார ஏடு".***

*இங்கே தமிழ்தேசிய பாசிஸ்டுகள் பேசும் பாட்டன் ,முப்பாட்டன் பழங்கால பெருமைகளையும், இவர்கள் பேசுவதும் சிங்கள இன வெறியர்கள் பேசுவதும் ஒரே பாசிச பார்வைதான் இதை பிரபாகரன் ஏற்கவில்லை. அவரது பார்வை நவீனத்துவம் நிறைந்தது அறிவியல் வளர்ச்சியை உள்ளடக்கியது. அவர் இவ்வாறு கூறுகிறார்,*

***"அசுர வேகத்தில் வளர்ந்துவரும் அறிவியலும் அதனால் எழுந்த புதிய உலகப் பார்வையும் மனிதனை ஒரு புதிய யுகத்திற்கு இன்று இட்டுச்செல்கின்றன. இந்த அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப, கால மாற்றத்திற்கு ஏற்ப, சமூகப் பண்பாட்டுப் புறநிலைகளுக்கு ஏற்பச் சிந்தனை உலகமும் மாற்றங்களைச் சந்திக்கிறது. ஆனால், சிங்களத் தேசத்திலே அதன் சிந்தனை உலகிலும் சரி, அதன் சமூக உலகிலும் சரி எதுவித மாற்றமும் நிகழவில்லை. (2006 மாவீரர் நாள் உரை)***.*அதே உரையில் மேலும் கூறுகிறார்.*

***அண்டவெளி ஆராய்ச்சிகள், சந்திரமண்டல ஆய்வுகள், அணுக்கருப் பரிசோதனைகளெனப் புதிய பாதையிலே பயணிக்கின்றன. மனித சமுதாயம் முன்னெப்போதும் காணாத புதிய சவால்களுக்கு முகம்கொடுத்து, இயற்கையின் எண்ணற்ற புதிர்களுக்கு விடைகள் காணவும் தீராத வியாதிகளுக்குத் தீர்வுகள் தேடவும் புதிய பயணத்திலே இறங்கியிருக்கிறது.***

***அரிய உயிரினங்களையும் தாவர வகைகளையுங்கூடக் காத்து, பூகோள முழுமையையும் பாதுகாக்கின்ற புனித முயற்சியிலே காலடி எடுத்து வைத்திருக்கிறது. ஆனால், சிங்களத் தேசம் மாத்திரம் நேரெதிர்த் திசையிலே, அழிவு நோக்கிய பாதையிலே சென்று கொண்டிருக்கிறது. தன்னையும் அழித்து, தமிழினத்தையும் அழித்து வருகிறது. இதனால், அழகிய இலங்கைத்தீவு இரத்தத் தீவாக மாறியிருக்கிறது"***.

*பெரியார் பேசிய பகுத்தறிவையும், பெண் விடுதலையையும் உள்ளடக்கியதே தனது கொள்கை என்றும் பிரபாகரன் கூறுகிறார்.*

***"உரிமைகளும் பாதுகாக்கப்பட்டு, வளர்ச்சி விரைவுபடுத்தலையும் ஒரு சுதந்திரமான, பகுத்தறிவு பெற்ற சமூகமே. சேகுவேரா என்னை மிகவும் வசீகரித்த கொரில்லா வீரர்."- தி வீக் ஆங்கில வார ஏடு 23-03-1986.***

*இப்போது தமிழ்தேசியம் பேசும் சீமான் என்ற கோமாளி தன்னை முதலமைச்சராக கற்பனை செய்து கொண்டு இருக்கிறார். ஆனால் தன்னை தேடிவந்த முதலமைச்சர் பதவியை உதறி தள்ளிவிட்டு விடுதலை போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நடத்தியவர் பிரபாகரன். ராசீவ் ஜெயவர்த்தன ஒப்பந்தத்தின் படி தமிழீழ பகுதிக்கான முதலமைச்சர் பதவி பிரபாகரனுக்கு வந்தது.அதை ஏற்க மறுத்தார் பிரபாகரன்.*__"உரிமையற்ற ஒரு மாநிலத்தில் நான் முதலமைச்சராக இருக்க மாட்டேன்"__ *என்று கூறினார்.*

*அந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்ததன் காரணமாக தான் இந்திய இராணுவத்தின் அடக்கு முறைகளை எதிர்கொண்டு கடும் வீரர்களை உயிர்ப்பலி தர வேண்டியக் சூழல் உருவானது. முதல்வர் பதவியை ஏற்க மறுத்தற்கு பிரபாகரன் கொடுத்த கடும் விலை இது.ஆனால் இங்கே முதல்வர் பதவிக்காகவே தமிழ்தேசியம் பேசுகிறார்கள்.விடுதலைப்புலிகள் இயக்கம் பாலுறவு அத்துமீறல்கள் நடந்தால் அதற்கு மரணதண்டனை வழங்கியது.இங்கே பிரபாகரனை பேசுகிற பொது ஒழுக்கம் இல்லாத சீமான் ஈழத்தில் இருந்திருந்தால் புலிகள் இயக்கம் மரண தண்டனை வழங்கி இருக்கும்.*

*தனித் தமிழாடு கேட்ட பெரியார் இந்திய தேசியத்தை எதிர்த்தார். தமிழ்நாடு நீங்கலாக இந்திய தேசிய வரைப்படத்தை எரித்தார்.இந்தி திணிப்பை எதிர்த்து தேசியக் கொடி எரிப்பு போராட்டத்தை அறிவித்தார். பெரியார் போராட்டத்துக்காகவே தேசிய சின்னங்கள் அவமதிப்புச் சட்டத்தை அவசரஅவசரமாக கொண்டு வந்து மூன்று ஆண்டுகள் சிறை என்று அரசு அறிவித்தது. அதையும் மீறி அரசியல் சட்டத்தை பெரியார் தொண்டர்கள் கொளுத்தினார்கள். பெரியார் இயக்கத்தின் வீர வரலாறுகளை தமிழ் கோமாளிகள் கொச்சைப்படுத்துகிறார்கள். இவர்கள் கூறுகிற திராவிடத்தில் அடங்கியுள்ள தென் மாநிலங்களும் ஒன்றியத்துக்கு அடிமைப்பட்ட மாநிலங்களாகவே இருக்கின்றன. இவர்கள் எப்படி தமிழ் தேசியத்தின் எதிரிகளாவர்கள்?*

***நெறியாளர்:*** *தமிழ்தேசியம் பேசுகிறவர்கள் தமிழ்நாட்டில் நடக்கும் திராவிட ஆட்சியை மட்டுமே எதிரிகளாக சித்தரிக்கிறார்களே ?*

***பொதுச்செயலாளர்:*** *தமிழ்நாட்டில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சி ஒன்று மட்டுமே ஒன்றிய ஆட்சியின் மதவாத அரசியலையும்,மாநில உரிமையை பறிப்பையும், சமஸ்கிருத திணிப்பையும், கல்வி திட்ட திணிப்பையும், நிதி உரிமை பறிப்பையும் எதிர்த்து குரல் கொடுக்கிறது. சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுகிறது. ஆளுநரின் அடாவடித்தனத்தை எதிர்த்து நிற்கிறது. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்கிறது. தமிழ்நாட்டின் தன்னுரிமைக்காக நடத்தும் ஒரே ஆட்சி திராவிட மாடல் ஆட்சி தான்.*

*இதை போலி தமிழ்தேசியர்கள் எதிர்ப்பது பச்சை துரோகம்.*

***நெறியாளர்:*** *ஈழத் தமிழர்களுக்கு திராவிட இயக்கம் துரோகம் செய்து விட்டது என்று கூறுகிறார்களே ?*

***பொதுச்செயலாளர்:*** *இதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஈழபிரச்சினைக்காக இரண்டுமுறை பதவியை இழந்தது திமுக ஆட்சி. இந்திய அமைதிப்படை ஈழத்தில் இருந்து திரும்ப பெறச் செய்ததில் தமிழ்நாட்டு முதல்வராக இருந்த கலைஞருக்கு பெரும் பங்குண்டு. தமிழ்நாடு திரும்பிய* ***"அமைதிப்படையை வரவேற்க மறுத்தவர் கலைஞர்",*** *அதற்காக கலைஞர் மீது வழக்கு தொடர்ந்தார்கள். திரும்பி வந்த அமைதிப்படையினரை சென்னை துறைமுகத்தில் இறங்குவதற்கு அனுமதி மறுத்தது கலைஞர் ஆட்சி.*

*தமிழீழ பிரச்சினைக்கு தீர்வு காண இந்திய பிரதமர் விபி சிங்கிடம் வலியுறுத்தி அவரது ஆலோசனையின் பேரில் விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் உடன்பேச்சு வார்த்தை நடத்தியவர் கலைஞர். அடுத்த சில நாட்களிலே பத்மநாபா கொலை சென்னையில் நடந்ததால் அந்த முயற்சிகள் தடைபட்டன. இந்திய மற்றும் சர்வதேச நாடுகளுடன் இணைந்து திட்டமிட்டு நடத்தப்பட்டது முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை.*

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

முதல் பக்க தொடர்ச்சி

விடுதலை சிறுத்தைகள், திராவிடர் கழகம்,திராவிட இயக்கதமிழர் பேரவை, வெல்ஃபேர் கட்சி, தமிழ் புலிகள், மே 17 இயக்க தோழர்கள் கலந்துகொண்டனர்.

**தேனி**: யுஜிசி விதிகளில் திருத்தம் செய்து மாநிலங்களின் கல்வி உரிமை மறுக்கிற இட ஒதுக்கீட்டு உரிமையை மறுக்கிற ஒன்றிய அரசை கண்டித்து திராவிடர் விடுதலைக கழகம் சார்பாக தேனி பழைய பேருந்து நிலையத்தில் காலை 10 மணி அளவில் 13.02.2025 கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இதில் திவிக தேனி மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் தோழர் யோகேஸ்வரன் அவர்கள் கண்டன உரையாற்றினார். முற்போக்கு அமைப்புக்கள் உள்ளிட்ட திரளான தோழர்கள் கலந்துகொண்டனர்.

**மயிலாடுதுறை:** யுஜிசி விதிகளில் திருத்தம் செய்த ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும், மாநிலங்களின் கல்வி உரிமையை பறிக்காதே! தமிழ்நாட்டின் இட ஒதுக்கீடு உரிமையை பறிக்காதே! என்ற முழக்கத்துடன் 13.02.25 அன்றுமயிலாடுதுறை கிட்டப்பா அங்காடி அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் மகேஷ் தலைமையேற்க ,ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு தமிழர் தன்னுரிமை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் த.ஜெயராமன், தமிழர் உரிமை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சுப்பு. மகேஷ், ம.ம.க மாவட்ட செயலாளர் பாசித், தபெதிக மாவட்ட தலைவர் ரசீத்கான், திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை குழு உறுப்பினர் இளையராஜா, தஞ்சை மாவட்ட பொறுப்பாளர் சோலை. மாரியப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்கள்.

**வேலூர்**: இந்திய ஒன்றிய மோடி அரசு கொண்டுவந்து உள்ள யுஜிசி புதிய திருத்தத்தை கண்டித்து வேலூர் திராவிடர் விடுதலைக் கழகம் மாவட்டம் சார்பாக 13.2.2025 குடியாத்தம் பழைய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் திலிபன் தலைமையில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் குபேந்திரன் குடியாத்தம் நகரசெயலாளர், ராஜம் BSP வேலூர் மாவட்ட செயலாளர், சுந்தர் மக்கள் அதிகாரம், சிவக்குமார் திராவிடர் கழக வேலூர் மாவட்ட தலைவர், அன்பரசன் திக பகுத்தறிவு பேரவை, கஜேந்திரன் திவிக, ஜெயக்குமார் விசிக, அமல்ராஜ் குடியாத்தம் ஒன்றிய செயலாளர் திவிக, இரா.சிவா மாவட்ட செயலாளர் திவிக ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**பெரம்பலூர்**: ஒன்றிய அரசே! கல்வி உரிமையைப் பறிக்காதே! இட ஒதுக்கீட்டு உரிமையைப் பறிக்காதே! எனும் முழக்கத்தோடு கண்டன ஆர்ப்பாட்டம் 13.02.2025, மாலை 5.30 மணிக்கு பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. வரவேற்புரை ராஜேஸ்குமார் தி.வி.க துரை. தாமோதரன் மாவட்ட தலைவர், தங்கராசு மாவட்டத் தலைவர் (தி.க.), ரமேஷ்,மாவட்ட செயலாளர் சிபிஎம், ஞானசேகரன் மாநில கட்டுப்பாட்டுக்குழு சிபிஐ, காவிரி நாடன் மக்கள் அதிகாரம், காமராசு (வழக்கறிஞர்) மாவட்ட செயலாளர், பகுஜன் சமாஜ் கட்சி அன்புச் செல்வன்,இடதுசாரி செயல்பாட்டாளர் மக்கள் நல பாதுகாப்பு சங்க ஆலோசகர் N.செல்லத்துரை,மாவட்ட செயற்குழு சிபிஎம் அக்ரி, ஆறுமுகம் (தி.க.), வீர செங்கோலன் மாநில விவசாய அணி செயலாளர் வி.சி.க, இராமர் தமிழ்நாடு அறிவியல் மன்றம், ஈஸ்வரன் தொழிலாளர் கட்சி, குதரதுல்லா மாவட்டச் செயலாளர் த.மு.மு.கழகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**கள்ளக்குறிச்சி**: 14/2/2025 வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் வாணாபுரம் பகண்டை கூட்டுச்சாலையில் யுஜிசி விதியில் ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள திருத்தத்தையும் கல்வி மற்றும் இடஒதுக்கீடு பறிக்கப்படுவதை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட செயலாளர் க.ராமர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ரிசிவந்திய ஒன்றிய அமைப்பாளர் இராகார்மேகம், ரிசிவந்திய ஒன்றிய தலைவர் மா.குமார்,மு.நாகராஜ்,கி. ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக மாவட்ட தலைவர் க.மதியழகன், மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை, அறிவியல் மன்ற அமைப்பாளர் வீ.முருகன் ,நிறைவாக தலைமைக் குழு உறுப்பினர் ந.அய்யனார் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் கு.பாபா நன்றியுரை கூறினார். நிகழ்வில் தோழர்கள் இரா. சதீஷ். ஏ.ஜெயாபிகாஷ் . மா.பிரபாகாரன். கோ.விஜய கிருஷ்ணன். ஆ.சந்தோஷ். ச.வாசு. மு.ஜெயகுமார், மூ.சபரி, மு.இராவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நாமக்கல்:** கல்வி உரிமை, இட ஒதுக்கீட்டு உரிமை, மாநில உரிமைகளை பறிக்கும் வகையில் ஒன்றிய அரசு யுஜிசியில் திருத்தம் செய்துள்ளதை கண்டித்து .13.02.25 அன்று இராசிபுரம் பழைய பேருந்து நிலையம் பகுதியில் தி.வி.க மாவட்டத் தலைவர் சாமிநாதன் அவர்களின் தலைமையில் ஒன்றிய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அரசின் போக்கைக் கண்டித்து கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டது. நிகழ்வில் கிருஷ்ணசாமி மா.துணைச் செயலாளர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி,சரவணன் மா. செயலாளர் தி.வி.க, கபிலன் நாமக்கல் நா.தொ.துணைச்செயலாளர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, கண்ணன் மாநில துணைச் செயலாளர் ஆதித் தமிழர் பேரவை, முத்துப் பாண்டி, மா.அமைப்பாளர் தி.வி.க, மீனா மா.செயலாளர் அ.இ.மா.தே.சம்மேளனம், இராவணன் மா. செயலாளர் ஆதித் தமிழர் கட்சி, சாதிக்மா செயலாளர் AIYF, கண்டன உரையாற்றினர்.நிகழ்வில் முன்னிலை வகித்தவர்கள் மணிமாறன் நகரச் செயலாளர் சி. பி. ஐ,சுமதி மதிவதனி நகர அமைப்பாளர் தி.வி.க,பிரசாந்த் ஒன்றியச் செயலாளர் ஆதித் தமிழர் கட்சி,பிரகாஷ் பள்ளிப் பாளையம் பொறுப்பாளர் தி.வி.க, பிடல் சேகுவேரா நகரச் செயலாளர் தி.வி.க, வடிவேல் குமாரபாளையம் தி.வி.க நகர செயலாளர் நன்றியுரை ஆற்றினார்.

**மதுரை**: 13.02.25 அன்று மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் முன்பாக தோழமை இயக்கங்களுடன் இணைந்து கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது.சமூக நீதிக்கு எதிரான மாநில உரிமைக்கு எதிரான கல்வி உரிமைக்கு எதிராக ஒன்றிய மோடி அரசால் கொண்டு வரப்பட்டு இருக்கும் தீர்மானத்துக்கு எதிராக பல்வேறு இயக்க தோழர் கண்டன உரை நிகழ்த்தினார்கள். பசும்பொன் பாண்டியன் தலைவர் -அ.தி.ம.மு.க, மீ.த. பாண்டியன் தலைவர் - தமிழ் தேச மக்கள் முன்னணி, குமரன் - பு.இமு, மணிபாபா தமிழக வாழ்வுரிமை பாதுகாப்பு மக்கள் கட்சி, விடுதலை வீரன் அமைப்பு செயலாளர் திராவிடர் தமிழர் கட்சி,நாகபாலன், புரட்சி கவிஞர் பேரவை மெய்யப்பன், தமிழ் தேச குடியரசு இயக்கம் தமிழ் பித்தன், தபெதிக பேரவறிளான், பொதுச் செயலாளர் தமிழ் புலிகள் கட்சி, செல்வம் ஆதித்தமிழர் பேரவை, மாநில கலை இலக்கிய அணி செயலாளர் ராமலிங்கம், மாநில ஒருங்கிணைப்பாளர் மக்கள் அதிகாரம் பல்வேறு அமைப்பு தோழர்கள் ஒன்றிய அரசுக்கு எதிராக தங்களின் எதிர்ப்பை பதிவு செய்தனர். திவிக சார்பில் வேங்கைமாறன், சத்தியமூர்த்தி, முருகேசன், வாசுகி முருகேசன், முத்து (சிவகங்கை மாவட்ட தலைவர்) ஆகியோரும், இந்த கண்டன ஆர்பாட்டத்தில் பங்கேற்றனர்.

**திருச்சி**: யுஜிசி விதிகளில் திருத்தம் செய்து கல்வி உரிமையை பறிக்காதே! இட ஒதுக்கீட்டு உரிமையைப் பறிக்காதே என்னும் முழக்கங்களுடன் திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 13.02.25 அன்று திருச்சி மரக்கடை ராமகிருஷ்ணா மேம்பாலம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் திருச்சி மாவட்ட தலைவர் புதியவன் தலைமையில் நடைபெற்றது.

**காஞ்சிபுரம்**: 13.02.25அன்று மாலை 05.00 மணியளவில் சின்ன காஞ்சிபுரம் டோல்கேட் பகுதியில்யுஜிசிதிருத்தப்பட்ட வரைவு அறிக்கையை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலைமை .கா.ரவிபாரதி. வரவேற்புரை. ந.ராமஜெயம் உலக ஒளி சம்பத்குமார் பாடல்கள் பாடினர். வாலாசா வல்லவன் துணைப் பொதுச்செயலாளர் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடமைக் கட்சி,காஞ்சி அமுதன்,பாசறை செல்வராஜ்,அவெ முரளி மதிஆதவன்,மகேஷ்,சி.நடராசன்,பழநி சாரதாதேவி, தஞ்சை தமிழன்,மோகன்,சீதாவரம் மோகன்,லெனின்குமார் டில்லி தோழமை அமைப்புத் தோழர்கள் கண்டன உரையாற்றினார்கள்.மக்கள் மன்றம்,விசிக உள்ளிட்ட பல்வேறு முற்போக்கு இயக்கங்கள் கலந்து கொண்டனர்.ஏழுமலை நன்றி தெரிவித்தார்.

## புரட்சிப் பெரியார் முழக்கம்

**ஆண்டு சந்தா : ரூ.300/-**

**ஐந்தாண்டு சந்தா : ரூ.1500/-**

**தொடர்புக்கு : 15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை - 600096.**

**பேச : 63697 76351, முழக்கம் தொடர்பான சந்தேகங்களுக்கு மேற்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.**

**மின்னஞ்சல் :** newsdvk@gmail.com.

3-ஆம் பக்கம் தொடர்ச்சி

இதில் அதிகாரம் ஏதும் இல்லாமல் தமிழ்நாட்டு முதல்வராக இருந்த கலைஞர் எடுத்த முயற்சிகள் பயன்தராமல் போய்விட்டதே உண்மை வரலாறு. திராவிடர் இயக்கத்திற்கும் நீண்ட நெடிய வரலாறு உண்டு.

1950 முதல் ஈழ தமிழர்களுக்காக குரல் கொடுத்து வந்த திமுக. **கடல் தண்ணீர் உப்பாக இருப்பதற்கு காரணம் ஈழத் தமிழர்களின் கண்ணீர்** தான் என்று எழுதினார் அண்ணா. ஈழ தந்தை செல்வா பெரியார் அண்ணா கலைஞரிடம் நெருக்கமாக நட்புக் கொண்டிருந்தார். ஈழத் தந்தை செல்வா மறைவிற்குப் இறுதி வணக்கம் செலுத்த முதல்வராக இருந்த கலைஞர் தமிழ்நாட்டு அரசு சார்பாக ஒரு குழுவை அனுப்பி வைத்தார்.

இப்படி ஈழத் தமிழர்களுக்கும் திராவிட இயக்கங்களுக்கு நீண்ட வரலாறு உண்டு. இறுதிக்கட்ட போரில் நாமும் கலைஞரை கடுமையாக விமர்சித்தது உண்டு ஆனாலும் அதை இப்போது மறுபரிசீலனை செய்ய வேண்டி இருக்கிறது.

**-நிறைவு**

Tamil Weekly
Posted at : Pathrika Channel,
Egmore RMS Under WPP

Posted : February 21, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran